சமய நெறியும் மனித வாழ்க்கையும்

தி. சேஷாத்திரி

தமிழ்நாடு காந்தி நினைவு நிதி
மதுரை-20.

தமிழ்நாடு காந்தி நினைவு நிதி வெளியீட்டு எண் : 105

நூலின் பெயர்	:	சமயநெறியும் மனிதவாழ்க்கையும்
ஆசிரியர்	:	தி. சேஷாத்ரி, M. A.
பொருள்	:	சமயம்
வெளியிட்டோர்	:	தமிழ்நாடு காந்தி நினைவு நிதி மதுரை - 625020.
அச்சிட்டோர்	:	ராம்ஜே பிரிண்டர்ஸ், மதுரை - 625001.
பதிப்பு	:	முதற்பதிப்பு : நவம்பர், 1970. இரண்டாம் பதிப்பு : ஜனவரி, 1977.
பிரதிகள்	:	2000
விலை	:	80 பைசா

Name of book	:	Samayaneriyum Manitha
	:	Vaazhkkaiyum
Author	:	T. Seshadri
Subject	:	Religion
Publisher	:	Tamilnad Gandhi Smarak Nidhi, Madurai—625020.
Printer	:	Ramjay Printers, Madurai.
Edition	:	First; November, 1970.
	:	Second; January, 1977.
Copies	:	2000
Price	:	80 paise.

பதிப்புரை

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தலரிது" எனப் பாடினர் ஔவைப் பிராட்டியார். "மரணமில்லாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் காண்பீர்" என சாகாக்கலையை அழகுற, ஆணித்தரமாகச் சொல்லுகிருர் வள்ளலார்.

வாழ்வில், மரணமில்லாப் பெருவாழ்வு, சாகாப் பெருநிலை வேண்டுமானுல் மனிதன் தன்னையறிதல் வேண்டும். உள்ளது சிறக்க வேண்டும்; இந்த உடலை ஆண்டவனது கோவிலாக்கி உள்ளத்தை உயர்த்தி அவனை எண்ணி வாழும் வகையில் வாழ்க்கையை அமைத்துக் கொண்டால் பக்தனுக்கு உயர்ந்த சீலமும் பண்பும் தாமாகவே அமைந்துவிடும்.

காந்தியடிகள் சத்தியமே கடவுள் என்று சொன்னுர்கள். மனிதன் தன்னை ஆழ்நிலையில் அறிந்து தெளித்தால் ஆக்க அறிவு பெறலாம் என மகரிஷி மகேஷ் யோகி கூறுகிருர். கடவுள் என்பதும் சத்தியம் என்பதும் ஆக்க அறிவு என்பதும் ஒன்றேதான். சமயம் எம்முறையில் வெளிவந்தாலும் மேன்மையானதே.

கடவுளை வழிபடுவதின் அவசியத்தை மக்களுக்கும் குழந்தைகளுக்கும் நாம் கற்றுக் கொடுக்க வேண்டும். மனித வாழ்க்கை சமயநெறியுடன் பின்னிப் பிணைந்து கிடக்கிறது சமயத்தின் பல்வேறு நிலைகளையும் விளக்கும் இந்நூலை பேராசிரியர் திரு தி. சேஷாத்திரி அவர்கள் எளியமுறையில் அழகாக ஆக்கித் தந்திருக்கிருர். தமிழக மக்களுக்குப் பெரிதும் பயன்படவேண்டுமென்று, இரண்டாவது முறையாக இந்நூலைத் தமிழ்நாடு காந்தி நினைவு நிதி வெளியிடுகிறது.

ச. அழகர்சாமி
காரியதரிசி
தமிழ்நாடு காந்தி நினைவு நிதி

மதுரை—625020.
நாள் : 10—1—1977

"சமயம் பெருமைக்குரியது; அனைவருக்கும் உகந்தது. எவ்விதத்தில் வெளியானாலும் அது நேர்மையான மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத பகுதி.

வழிபாடு சமயத்தின் ஒரு பிரிவு; குறிப்பிட்ட பயன்களை வாக்களிக்காமல், கடவுளை வழிபடுவதன் அவசியத்தைக் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுத்தாக வேண்டும்".

...பர்ல் எஸ் பக்

பொருளடக்கம்

மனிதன் யார்?

மனிதன் யார்? அவனுடைய இயல்பு என்ன? அவனுடைய இலக்கு எது? அவன் எப்படி வாழ்கின்றான்? அவன் விரும்புபவை, வெறுப்பவை எவை?- இத்தகைய வினக்களை எழுப்பி எண்ணிப் பார்க்கின்றபோது, இவற்றினுடைய விடைகள் சுவையும், நன்மையும் உடையனவாய் உள்ளன. இவற்றிற்குச் சரியான விடைகள் கூற சமயம் முற்படுகின்றது. அவை எவ்வளவு தூரம் பொருத்தமும், பொருளும் உடையவை என்பதை அறிய வேண்டும்.

மனிதனை முக்கியமாக மூன்று முறைகளில் அறிகின்றோம். முதலாவதாக கண்ணால் காண்கின்றோம்; அப்பொழுது அவனுடைய உடலின் அகல-நீளத்தை, வயது, நிறம் ஆகியவற்றைக் காண முடிகின்றது. இரண்டாவதாகக் கருத்தால் பார்க்கின்றோம்; அப்பொழுது அவனுடைய சிந்தனை, செயலைப் பார்க்க முடிகின்றது. மூன்றுவதாக உள்ளத்தால் உணருகின்றோம்; அப்பொழுது அவனுடைய அன்பை பண்பை உணர முடிகின்றது.

மனிதன் பிறக்கின்றான்; கொஞ்ச காலம் உயிருடன் இருக்கின்றான். ஒருவன், அதிகமாகப் போனால், நூறு ஆண்டுகள் வாழ்கின்றான் என்று வைத்துக் கொள்வோம். இதிலே பிறரையே நம்பி இருக்கும் பிள்ளைப் பருவம், அறியாததை அறிந்து கொள்ளும் இளமைப் பருவம், கற்றதை மறந்து நிற்கும் கிழமுன் பருவம்,

மீண்டும் பிறரை நம்பி வாழும் கிழப்பருவம் ஆகியவற்றை எல்லாம் நீக்கினுல் உருப்படியாக இருபத்தி ஐந்து ஆண்டுகள்தான் மிஞ்சும். இதிலே தூக்கம், வியாதி ஆகியவை கொள்ளே கொண்டு விடுகின்ற நாட்களேயும் நீக்கி விட்டால் எஞ்சி இருப்பது எவ்வளவு?

இந்த நாட்களில்தான் அவன் எல்லாச் செயல்களேயும் செய்கின்ருன். அப்படி இப்படி என்று ஆரவாரம் செய்கின்ருன். முன்னுக்குப்பின் முரணுகவும், மற்றவர்களிடத்திலிருந்தும் வக்கரித்துச் செல்கின்ருன்; நெகிழ்கின்ருன்; நெட்டுயிர்க்கின்ருன்; சிரிக்கின்ருன்; கொம்மாளம் இடுகின்ருன்; அலறுகின்ருன்; அழுகின்ருன்; விட்டேனு பார்! என்று சவால் விடுகின்ருன்; பயம் பிடித்து ஒளிந்து திரிகின்ருன். சுருக்கமாகச் சொன்னுல் இந்தக் குறுகிய காலத்திலேதான் அவன் அத்தனே செயல்களேயும் செய்கின்ருன்.

என்னே விந்தை! ஒருவன் பணம்! பணம்! என்று நாளும் அலேயாய் அலேகின்ருன். மற்ருெருவன் சேவை! சேவை! என்று அல்லும் பகலும் அயராது உழைக்கின்ருன். பிறிதொருவன் இன்பம்! இன்பம்! என்று தேடித்தேடி அந்தச் சுழலில் சிக்கித் தவிக்கின்ருன். சற்றே நின்று மனித வாழ்க்கையை உற்றுப் பார்த்தால் யாருக்கும் ஒரு புறம் வியப்பும் மறுபுறம் விஞவும் எழாமல் போகா.

மனிதன் காரண காரியத்தைத் தெரிந்து கொண்டு தான் இப்படி இயங்குகின்ருனு? அல்லது இனம் புரியாத ஒரு தூண்டுதலால் உந்தப்பட்டு ஏதோ ஒன்றின் பின்னுல் இழுத்துச் செல்லப்பட்டு ஓடுகின்ருனு? அல்லது அவன் தனக்குத்தானே ஒரு குறிக்கோளே சிந்தித்து ஏற்றுக் கொண்டானு? அல்லது யாரோ சொன்னதை அப்படியே பிடித்துக் கொண்டானு? இவற்றையெல்லாம் பற்றிச் சிந்தித்து நாம் நல்ல விடை காண முடியுமாஞல் அதஞல் பிறருக்குப் பயன் உண்டோ இல்லேயோ, நமக்கு உண்டு. எனவேதான் நாம் மனித வாழ்க்கையைப் பற்றி ச் சிந்திக்க விரும்புகிருேம்.

மனிதன் யார்? அவனுடைய உண்மைத் தன்மை அல்லது உண்மை உருவம் எது? இதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் அவனுடைய வாழ்க்கையின் தன்மை, குறிக்கோள், குறிக்கோளை நோக்கி அவனை இட்டுச் செல்லும் இயக்க ஆற்றல், பின்பற்ற வேண்டிய நெறிகள் ஆகியவற்றைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியும்.

★

மனிதனின் அடுக்குகள்

மனிதனைத தெரியாதா நமக்கு! அவன் கைகள், கால்கள் போன்ற ஐந்து வகைக் கர்மேந்திரியங்களையும், கண்கள் போன்ற ஐந்து வகை ஞானேந்திரியங்களையும் கொண்ட உடல் உருவை உடையவன். முதலில், உலகம் இந்த உருவத்தில் தான் இவனை அறிந்து கொள்கின்றது. பிறகு அவனுடைய உடலின் அமைப்பைக் கொண்டு உயரமானவன், குட்டையானவன்; கருப்பன், சிவப்பன் என்று அடையாளம் கண்டு கொள்கின்றது. அழகன், குரூபி, உடல் நலம் பெற்றவன், வியாதிக்காரன் என்று பகுத்துச் சொல்கின்றது.

இதுதான் அவனுடைய முழு உருவமா? அரிசி, பருப்பு, காய், கனி, அல்லது புலாலினை வேகவைத்தோ, வேக வைக்காமலோ உண்டு, பருத்தோ, இளைத்தோ, வாடியோ, செழித்தோ, தேய்ந்தோ, நோயினுல் தொய்ந்தோ முதுமைபெற்று அழிந்துவிடும் இந்த உடல் தான் மனிதனு? இல்லை. இது தூல உருவம். இதை ஒட்டி சூக்கும-மான ஒரு நிலை, ஒரு தளம், ஒரு தன்மை அல்லது ஓர் உருவம் உண்டு.

அவன் உண்டு, உடுத்தி இருக்கும் வகை, பேசிப் பழகும் தோரணை, அவனுடைய விருப்பு-வெறுப்புக்கள் ஆகியவற்றினைக் கொண்டு அவனுடைய பண்புகளை அறிந்து கொள்கின்றோம். அவன் இதயத்திலே எழும் உணர்ச்சிகளைப் புரிந்து கொள்கின்றோம். இவன் கோபக்காரன், அவன் அன்பானவன், என்றெல்லாம் பாகுபடுத்தி அறிகின்றோம். இது அவனுடைய மனக்கோலம்; மனத்தளத்திலுள்ள அவனுடைய உருவம், அவனைப் பற்றிய அறிவு இத்துடன் முடிவடைந்துவிடுகின்றதா?

இத்தகைய உணர்ச்சிகளையும், இவற்றின் தூண்டுதலால் நிகழும் நிகழ்ச்சிகளையும், விளைவுகளையும் கவனித்துப் பாகுபடுத்தித் துய்த்திடவும், இவ்விளைவுகளைத் தன் விருப்பப்படி நடத்துவதற்கேற்ற வகையிலே எண்ணங்களையும் இயக்கங்களையும் கட்டுப்படுத்திக் கொண்டு சென்றிடவும் உதவும், உருக்கொடுக்கும் ஒரு பகுதியும் மனிதனிடத்தில் இருக்கின்றது. அது நினைவாற்றல், பகுத்தறிவு, முடிவு செய்யும் ஆற்றல், உறுதி ஆகிய பல தோற்றங்களை அல்லது இயக்கங்களைக் கொண்ட புத்தி அல்லது அறிவுருவமாகும். இவ்விரண்டும் அவனுடைய சூக்கும உருவங்கள்.

மனமும் மனிதனும்

தொகுத்துப் பார்க்குங்கால் மனிதன் உடல், மனம், புத்தி ஆகிய மூன்று அடுக்குகளில் இயங்கும் ஒரு தொகுப்பு உருவமாகும். இம்மூன்று தளங்களிலும் இயங்குகின்ற அவனிடம் ஓர் இணைந்த இயக்கமும் உண்டு. சில சமயங்களில் ஒன்றுக்கொன்று மாறுபட்ட இயக்கங்களும் ஏற்படுவது உண்டு. புத்தி ஒன்றைச் சொல்ல, மனம் மற்றொன்றை விரும்ப, பொறிகள் பிறிதொன்றில் ஈடுபடவும் நேரலாம்.

இம் மூன்றிலும் மனத்தளம்தான் மிகவும் முக்கியமானதாகும். அது புத்தியுடன் இணைந்து கட்டுப்பட்டு, இந்திரியங்களை நல்ல முறையில் செலுத்தி நல்ல பேர் எடுத்தாலும் எடுக்கும்; அப்போது மனிதன் மேலோன் ஆவான். அல்லது பொறிகள் விரும்பும் இன்பங்களைத் தேட அவற்றிற்கு உதவிசெய்து, புத்தியை மீறிக் கீழ்த்தரமாக ஓடிக் கெட்டாலும் கெடும். அப்போது மனிதன் கீழோன் ஆகிவிடுவான். இந்த உடல் அவனுக்குக் கிடைத்துவிட்டது. அதிலே அவன் அடிப்படைமாறுதல் எதையும் செய்ய முடியாது. அதைத் தூய்மையாக அழகாக, அலங்காரமாக வைத்துக்கொள்ளலாம். அதை மனதுக்கு உட்படுத்திச் சுறுசுறுப்பாக இயக்க முடியும். அல்லது உடலின்பம் நாடும் கருவியாக மாற்றித் தவருன வழியில் செலுத்திக்கெடுத்துக் கொள்ளவும் முடியும். 'பரோபகாரார்த்தம் இதம் சரீரம்' எனக் கொண்டு, இதைப் பிறர் நலனுக்குப் பயன்படுத்தி, நல்ல நிலையில் வைத்துக் கொள்ளவும் முடியும்.

காந்தியடிகள் இதைப்பற்றி பின்வருமாறு கூறுகின்ருர். "ஆண்டவனுக்கு இந்த மனித உடல் ஒரு கோயில் என்பார்கள் அல்லவா? அப்படிச் சொல்வதில் தவறு ஒன்றுமில்லை. ஆயினும் தோலும் சதையும் கொண்ட அந்தக் கோயில்கள் எத்தனையோ பாபங்களும், குற்றங்களும் நிறைந்தவைகளாக இருக்கின்றன."

இந்த உடலைப் பற்றி டாக்டர்கள், காதலர்கள், சமயவாதிகள் முதலானோர் கொண்டிருக்கும் கருத்துக்கள் வெவ்வேருனவை. மற்றவற்றைப் பற்றி இங்கே எடுத்துச் சொல்லத் தேவையில்லை. நமக்குச் சமயவாதிகளின் கொள்கைதான் முக்கியம்.

சமயவாதி இந்த உடலை......!

1. ஆண்டவனின் கோயிலாக ஆக்கி,
2. பிறருக்குப் பணி புரியச் செய்து,

3. பிறப்பு, வளர்ச்சி, வியாதி, தேய்வு, மூப்பு, நாற்றம் முதலியவற்றைக் கொண்ட இதனை மறு பிறவியின் வாயிலாக மீண்டும் பெருத வகையில் பயன்படுத்த வேண்டுமென்று எண்ணுகின்ருன். அதனுல் அவன் உடலை மிகவும் தாழ்ந்த நிலையில் வைத்து, அதற்கு உரிய அளவுக்கு மேல்மதிப்புக்கொடுக்காமல், அதிலிருந்து மனதை இழுத்து மேலே நோக்கச் செய்து, ஆண்டவனை எண்ணி வாழும் வகையில் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள விரும்புகின்ருன்.

மனோ விஞ்ஞானிகள் மனதைப் பற்றிப் பல உண்மைகளைக் கண்டுபிடித்துள்ளார்கள். அடிமனம், மேல்மனம் ஆகியவற்றின் தன்மைகளைப் பற்றியும், மனம், உடல் ஆகியவற்றினிடையே ஒன்றுக்கொன்று நிகழும் விளைவுகள் பற்றியும் பல பட ஆராய்ச்சி செய்து பல உண்மைகளைக் கண்டுபிடித்துள்ளார்கள்.

''நல்ல உடலில் தான் மனம் நலமாயிருக்கும்'' என்ற ஆங்கிலப் பழமொழி மனதிற்கும் உடலுக்கும் உள்ள உறவைப் பற்றி மிக அழகாகக் கூறுகிறது. மனம் ஒரு குரங்கு. உடல் நலிவுக்கு மன நோயும் ஒரு காரணமாகும். முதலில் உடலில் அசைவுகள், மெய்ப்பாடுகள் உண்டாக, பிறகு அதற்கேற்றவாறு மனதில் இன்பம், கிளு கிளுப்பு, துன்பம் முதலியவை உண்டாகும் என்றெல்லாம் அவர்கள் அறிந்தார்கள்.

ஆறுவது சினம், யாரிடத்திலும் வெறுப்புக் கொள்ளாதே! எப்போதும் அன்பை வளர்ப்பாய்! எப்போதும் மகிழ்ச்சியாக இரு!- என்றெல்லாம் அறிவுரையும் சொன்னுர்கள்.

உடல், மனம் ஆகியவற்றைப்பற்றி ஆராய்ச்சி செய்தவர்கள், புறப்பொருள்களான பௌதிக, ரசாயனப் பொருள்களைப் பற்றி ஆராய்ச்சி செய்தவர்கள், கோள்களைப் பற்றி ஆராய்ச்சி செய்தவர்கள் ஆகிய அனைவருமே மனித வாழ்க்கை நன்கு அமைவதற்கு வேண்டிய பல அறிவுரைகளைச் சொல்லிப் போந்துள்ளார்கள்.

இவர்கள் எல்லோரும் உடல், மன, உருவ மனிதர்களுக்கெனவே சிந்தித்தவர்கள், பேசியவர்கள், சொன்னவர்கள். அப்படி அவர்கள் சிந்தித்தபோதே மேலும் சற்று ஆழ்ந்து சென்று ஒரு உண்மை-யையும் கண்டார்கள்.

மனிதர்களை ஆட்டி வைப்பது உடல், மனம் ஆகிய இரண்டு மாகும். அவற்றிற்கு உருவமும், உண்மையும் தருவது புத்தியாகும். அப்புத்தி உடல், மனம் இவற்றின் காரணமாகவே வளர்ந்து தன் உருவைப் பெறுகின்றது. பிறகு மனத்தினுடைய உதவியைக் கொண்டு அதன் மூலமாகவே உடலையும் அடக்கி இயக்கும் ஆற்றலைப் பெற்று விடுகின்றது. அது மட்டுமல்ல, எது நல்லது எது கெட்டது என்று புரிந்து கொள்ளுகின்ற ஆற்றல் உடையதாக அது வளர்-கின்றது. மனிதன் உயர்ந்த கொள்கைகளை மேற்கொண்டு சிறப்பாக வாழ்வதற்குரிய உலகியல் அறிவையும், குறிக்கோள்களின் கருத்துக்-களையும் மனிதனுக்குத்தருவது அறிவாகும். அது நினைவாற்றல், பகுத்துத் தொகுக்கும் திறமை ஆகியவற்றின் அடிப்படையில் கருத்-தினை உருவாக்கும் சக்தியைப் பெற்றுள்ளது. அதிலிருந்து குறிக்-கோளை உண்டாக்கும் திறன் ஏற்படுகின்றது. குறிக்கோளை நிறை வேற்றுவதற்குரிய முறையிலே உடலையும், மனத்தையும் ஆட்டு-விக்கின்ற வேகத்தை அது பெற்றுள்ளது.

மனிதன் வாழ்வு

மனிதனுடைய வாழ்வு உயர்ந்த கருத்துக்களையும், சிறந்த குறிக்கோளையும் கொண்டிருக்கின்ற போது புகழுக்கு உரியதா-கின்றது. அவ்வாறின்றி முற்றிலும் முரணாக இருக்கின்றபோது இகழுவதற்குரியதாகின்றது.

அறநெறிகள் எல்லாம், சிறந்த குறிக்கோளைக் கொள்வதற்குரிய திறமையையும், ஆற்றலையும் புத்திக்குக் கொடுக்க முயலுகின்றன.

'மானத்துடன் வாழ்வாய்', 'பிறருக்கு உபகாரமாக இரு' என்பன போன்ற உயரிய கொள்கைகள் முதல் பண்பாட்டுக்கான அடிப்படைகள் வரை இப்படி வகுத்துத் தருகின்ற அறநெறிகள் தாம் மனிதனை அளவிட்டு அவன் மூன்று உருவம் கொண்டிருக்கின்றான் என்பதை உலகியல் அறிவுக்கு புரிய வைக்கிறது. இந்த எல்லைக்குள் நின்று அறநெறிகள் எவ்வளவோ செய்கின்றன.

சமயம் காணும் மனித உருவம்

இந்த மூன்று துறைகளிலுமே விஞ்ஞானிகள் புரிந்து கொண்டவை ஆயிரம் ஆயிரம்-அனந்தம்.

"இதுவே போதும்! அறிவு எல்லை வரை அறிந்தாலே போதும்! அதற்குமேல் அறிய வேண்டியதில்லை. அதற்குமேல் உண்மையில்லை, அவை கற்பனை" என்று சொல்வோரும் உளர். சமயம் இம்மூன்றுக்கும்அப்பால் இருக்கின்ற மனித உருவத்தையும் புரிந்து கொண்டு பேசுகின்றது. அதுதான் சமயத்தின் தனித் தன்மை, சிறப்பு.

சட்டங்கள் இயற்றி அரசு மனித வாழ்க்கையைக் கட்டுப்படுத்துகின்றது. சமூகம் சில ஒழுங்குகளை ஏற்படுத்தி அவன் வாழ்வைக் கட்டுப் படுத்துகின்றது. விஞ்ஞானம் அவனுக்கு விஞ்ஞான விருந்தைப் படைக்கின்றது. ஆனால் மனிதன் தனக்கு வேண்டியதை எடுத்துக் கொண்டு வாழவோ, தாழவோ நலம் பெறவோ, தீமையடையவோ உள்ள சுதந்திரத்தில் விஞ்ஞானம் தலையிடுவதில்லை.

சமயமும் வாழ்வும்

இந்த நிலையில் மனிதன் வாழ்கின்றான். அவனுடைய வாழ்க்கையின் தன்மை என்ன? போக்கு என்ன? குறிக்கோள் என்ன? வாழ்க்கையைத் துய்க்க அவன் பயன்படுத்தும் கருவிகள் யாவை? இவற்றைப் பற்றி மொத்தமாகச் சிந்திப்பது சமயத்தின் மற்றொரு சிறப்பு அம்சமாகும்.

மனித வாழ்க்கையைப் பற்றி ஆராயலாம். அதைப் பற்றி சங்கரருடைய சமய நூலாகிய 'ஆத்ம போதம்', ''உடல் போக ஆயதனம் (போக வீடு); மனம், புத்தி ஆகியவை அதற்குக் கருவிகள்'' என்று சொல்லுகின்றது

அவன் விலக்கவோ, நிறுத்தவோ முடியாத நிலையில் உயிருடன் இருக்கின்றானா? அல்லது வாழ்க்கையைச் சுவைத்து வாழ விரும்பி இருக்கின்றானா?

எல்லா உயிர்களுமே இன்பமாக வாழவே விரும்புகின்றன. வாழ்வே இன்பம் தேடும், இன்பம் துய்க்கும் பெரு முயற்சிதான்.

மனிதன் அதை எங்கே தேடுகின்றான்? புற உலகில் புற உலகப் பொருள்களில் தேடுகின்றான்.

அதை எங்கே துய்க்கின்றான்? உடல், மனம், புத்தியினால் அந்தந்தத் தளங்களில் துய்க்கின்றான்.

பொறிகள் மயமான மனிதன் மாம்பழம் சாப்பிட்டும், சங்கீதம் கேட்டும்-இவ்விதம் தூலப் பொருள்களில் இன்பம் சுவைக்கின்றான்.

மனோமயமான மனிதன் கவிதையின் பொருள் உணர்ந்து இலக்கிய இன்பம் பெறுகின்றான். அல்லது பிறருக்கு நன்மை செய்து இன்பம் அடைகின்றான். அந்த இன்பம் மேலே கூறியதை விடச் சற்று சூட்சுமமானது; அதனால் அதன் வலிமையும் சற்று அதிகமே.

புத்திமயமான மனிதன் கொள்கைகளுக்காக வாழ்கின்றான். அது முன்னே கூறிய இரண்டையும் விட மிகவும் சூட்சுமமானது. இதன் வலிமை அளவிடலரிது.

இம்மூன்று சுகங்களும் நிலைக்க முடியுமானால் சமயநெறியே தேவையில்லை. அரசின் சட்டமும், சமூகத்தின் கட்டுப்பாடும், அறநெறியுமே போதும். ஆனால் புற உலகப் பொருள்களினால் பெறப்படுகின்ற இந்த இன்பங்கள் நிரந்தரமாக இருப்பதில்லை. ஏன் என்றால், ஒன்று, பொருள்கள் மாறித் தேய்ந்து அழிகின்றன; இரண்டு, நம்முடைய மனம் மாறிவிடுகின்றது. எனவேதான் சமயம் நிரந்தரமான இன்பத்தைத் தேடும் வழியைச் சொல்லுகின்றது. அது மனிதனுக்கு மட்டுமல்ல, எல்லா உயிர்களுக்குமே அவ்வழியைச் சொல்லுகின்றது. ''உலகம் துக்கத்தின் ஆலயம், அழியக் கூடியது எனவே, என்னை அடை; மீண்டும் இதற்குத் திரும்ப வேண்டாம்'' என்கிறார் கண்ணன், கீதையில்.

மனித வாழ்வின் மற்றொரு பாகுபாடு

தரத்தையும் தன்மையையும் அடிப்படையாகக் கொண்டு மனித வாழ்வை மூன்று தரமாகப் பிரிக்கலாம்.

'ஏதோ பிறந்துவிட்டோம். பசிக்கிறது; உண்போம். ஊரார் சிரிக்கிறார்கள்; உடை கட்டுவோம். சோம்பலைப் போல் சுகம் இல்லை என்றாலும் பொறியின்பம் பெறுவதற்கு மட்டும் வேண்டிய அளவு உணவு தேட உழைத்தால், போதும்' என்ற தாமச வாழ்வு ஒரு பிரிவு.

'மனித வாழ்வில் சாதனைகள் புரிய வாய்ப்புகள் இருக்கின்றன. ஏதாவது சாதித்து நம் பெயரை நிலை நாட்டலாம். மற்ற மனிதர்களை அடக்கி உருட்டி வாழலாம்' என்று எண்ணி அந்த 'வேகத்தால்' உந்தப்பட்டு வாழும் ராஜச வாழ்க்கை இரண்டாவது பிரிவு.

'இந்த உடல் முன்வினைப்பயனாக வந்தது. இதன் மூலம் கடந்த கால (முற்பிறவிகளின்) வினைப்பயன்களைத் துய்த்துத் தீர்த்து பற்றற்ற பரோபகார வாழ்வு வாழ்வதன் மூலம் குற்றம், பாசம் அறுத்து நம்மையும் கடைத்தேற்றிக்கொண்டு உலகமும் உய்ய வழிகாட்டி கடவுளை வழிபட்டு நற்கதியடையலாம் என்று வாழும் சாத்துவீக வாழ்வு' மூன்றாவது வகை.

இம்மூவகை வாழ்வு வாழ்பவர்களுமே உண்பார்கள், உடுப்பார்கள், உலகில் உலவி வருவார்கள்; வேலையும் செய்வார்கள். காந்தியடிகளும் வாழ்ந்தார். நம்மில் மிக மிக மோசமான வாழ்க்கை நடத்தியவர்களும் வாழ்ந்தார்கள். அவரும் கணநேரம் சும்மா இருக்காமல் இயங்கினார். நாமும்தான் 'ஹா ஹா' என்று வௌவால்போல் வட்டமிட்டு அலறி ஓடியாடுகிறோம். இவ்விரண்டு வாழ்வுக்கும் வேறுபாடு இல்லையா? இதை நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிகிறது அல்லவா?

தாமச, ராஜச வாழ்வு வாழ்பவர்கள் வாழ்ந்தாலே போதும், உலகுக்குத் தீங்கும் தொல்லையும் ஏற்படும். ஆனால் சாத்வீக வாழ்வு வாழ்பவர்கள் சும்மா இருந்தாலே போதும், உலகுக்கு நன்மையும் பெருமையும் கிடைத்துவிடும். காந்தியடிகள் காலத்தில் வாழ்ந்த இந்தியர்கள் தாங்களும் உயர்ந்தார்கள்; உலகிலும் புகழ் பெற்றார்கள்.

சாத்வீக வாழ்வு வாழ்பவர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் எத்தகைய வாழ்வில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது பெரிதல்ல. அவர்கள் வண்டி ஓட்டலாம் கண்ணன்போல. நூல் நூற்கலாம்-காந்தியடிகள்போல. உழுது உழைத்து வாழலாம்.—ஸ்டாலின்போல. அல்லது அலுவலகத்தில் பணிபுரியலாம். சேனை வீரனாகக் கூட இருக்கலாம். ஆனால் பலனில் பற்றற்ற உள்ளமும், பிறர் நலம் விழையும் மனப்பாங்கும், "ஈசன் ஊடுருவி நிற்கும் உலகம் இது" எனவே தியாகம் செய்துதான் இன்பம் துய்ப்போம் என்ற கொள்கை-யும் தான் சாத்வீக வாழ்வின் அடையாளம். இந்த மனப்பாங்கைத் தான் சமய விஞ்ஞானம் தன்மையறிந்து, கூறுபிரித்து வழிபேணி வளர்க்க முயலுகிறது.

சமயம் மற்றொரு உண்மையைப் பற்றியும் அறிய முயல்கிறது. அதுதான் அடுத்த, மேலொரு—பிறிதொரு உலகத்தைப்பற்றிய, மறுமையைப்பற்றிய ஆராய்ச்சியாகும். இந்த உலக வாழ்வுடன் உயிர் முடிந்துவிடுவதாக எந்தச் சமயமும் கருதவில்லை. வரும் நிலை சூனிய நிலை என்று பேசும் புத்தமதமாயிருந்தாலும் சரி, ஈசன் நியாயம் சொல்லும் நாள்வரை காத்திருந்து அவர் கொடுக்கும் பரிசையோ தண்டனையையோ ஏற்க நிற்கிறது உயிர் என்று பேசும் கிறிஸ்தவ மதமாயினும் சரி, எல்லாச் சமயங்களும் பின்னால் வரும் ஒரு நிலை-யைக் குறிக்கோளாக வைத்தே இந்த உலக வாழ்க்கைக்கு நெறி வகுத்திருக்கின்றன. பிற உலக வாழ்வு எப்படிச் சொல்லப்பட்டிருந்த போதிலும் அந்த வாழ்வில், அந்த 'மறு உலக'த்தில் நல்ல நிலை கிடைக்கவேண்டும் என்ற அடிப்படைக் கொள்கை எதிலும் மாறுபட வில்லை. இஸ்லாம் மதமும் சுவர்க்கம் என்றும் நரகம் என்றும் பேசுகிறது.

இவ்விதம் சமய விஞ்ஞானம் மற்ற விஞ்ஞானிகளை விடமேலே போய், மனிதனுடைய இந்த உலகநிலை, விழிப்பு, கனவு, தூக்கம் ஆகிய மூன்று இருப்புக்கள், உடல், மனம், புத்தி இவற்றுடன் மட்டும் ஒட்டிய வாழ்வு, இவற்றை எல்லாம் மீறி மேலேபோய், விசாரித்தறிந்து

படைப்பு, படைத்தவன், படைக்கப்படும் முறை, உயிர் தோற்றம்-எடுக்கும் காரணம், உயிரின் தோற்ற எடுப்பிற்கு முந்தியநிலை, (தோற்ற மறைவுக்கு) இறப்பிற்குப் பிந்திய நிலை, உள் உலகம், வெளி-உலகம், வாழ்க்கை, முக்தி ஆகியவை பற்றியெல்லாம் ஆழமாக ஆராய்ச்சி செய்து அவற்றின் அடிப்படையில் மனித வாழ்க்கைக்-குரிய நெறியை வகுத்திருக்கின்றது. எனவேதான் சமய நெறி சிறந்ததாகவும், உண்மையில் நன்மை பயக்கக் கூடியதாகவும் இருக்கின்றது.

சமயம் வலியுறுத்தும் உண்மை

இங்கே நாம் அந்த அடிப்படை உண்மையை வலியுறுத்திச் சொல்ல விரும்புகின்றோம்.

உடல், மனம், புத்தி இம்மூன்றையுமே கருவியாகக் கொண்டு, அநுபவம் அடைந்து, இன்பமோ, துன்பமோ, பெறும் ஒரு 'உயிர்' அல்லது மனிதன் இவற்றிற்கும் அப்பாலானவன், இவற்றோடு இணைந்து நிற்கின்றான். அந்த, 'உயிர்த்தத்துவம்' தான், மனிதனின் உண்மை, அடிப்படை நிலை. அது சில சமயம் உடல் தளத்திலும் சில சமயம் மனத் தளத்திலும் மற்றும் சில சமயங்களில் புத்தித் தளத்திலும் நின்று இணைந்து உலகைத் துய்ப்பதை நம்மால் அறிய முடிகிறது.

சமயம் இம் மூன்றையும் தாண்டி நிற்கும் அம்மனிதத் தத்து-வத்தைப் புரிந்துகொண்டு, வாழ்க்கைக்கு நெறி வகுத்துக் கொடுக்க முயன்றிருக்கின்றது.

இம்மூன்று நிலையினையும் மீறிய அம்மனிதன் உண்மையில் எங்கே அடிப்படை நிலையினைப் பெறுகின்றான்? எங்கே நிலை பெற்றால் இவற்றால் இளைப்புறாமல் அவன் நிரந்தரமான இன்பத்தைப் பெற-

முடியும்? அங்கேதான் அவன் உண்மை நிலையில் இருக்க முடியும். எங்கே திரிந்தாலும், வீட்டுக்குச் சென்றடைந்தால்தான் மனிதனுக்கு உண்மையான சுகம் ஏற்படுகின்றது வெளியே சுற்றுவதை அடிப்படையாக வைத்து, வெளியிலேயே உள்ள நிலைகளின்மேல் எவ்வளவு நல்ல நெறிகள் வகுக்கப்பட்டாலும் அவை மாருத, நிரந்தர இன்பத்தைக் கொடுக்க முடியாது. வீட்டையும் எண்ணி, இன்றியமையாத தேவையால் சென்று, வெளியுலகிலிருந்து வீட்டுக்குள் அப்போதைக்கப்போதும், இறுதியில் ஒரேயடியாயும் வந்து சேரவேண்டிய உண்மையை மறவாமல் வகுக்கப்படும் நெறிகளும், காட்டப்படும் வழிகளுமே உண்மையில் நன்மை தருவனவாக அமைய முடியும்.

சமயம் வகுக்கும் நெறி

இதைத்தான் சமயம் செய்கிறது. இதனால் தான் சமயம் காட்டும் நெறி மற்றெல்லா நெறிகளையும் விட அடிப்படையாகவும் அதிகப்படியான, நிரந்தரமான நன்மையைப் பயப்பதாகவும் இருக்கின்றது.

இதை அறிந்த சமயம் வாழ்க்கையின் குறிக்கோளைப் பற்றி என்ன சொல்கின்றது?

மனிதன் தெரிந்து கொண்டாலும் சரி, தெரிந்து கொள்ளா விட்டாலும் சரி; தெரிந்தோ, தெரியாமலோ தவறான இடத்தில், தவறான முறையில் தேடினாலும் அவன் தேடுவது கீழ்க்கண்டவைகளையேயாகும்.

1) சுதந்திரம்.

2) இன்பம்.

3) கடவுளை அடைதல் ஒரு வகையில், அதாவது எல்லா நிலையில், இம்மூன்றுமே ஒன்றுதான். பிறப்பறுத்தல், தன் உண்மை நிலையினிடம் சேருதல், அல்லது முக்தி.

சுதந்திரம்

புலன்கள், புறப்பொருள்கள் ஆகியவை தருகின்ற இன்பத்தின் காரணமாக மனிதன் சுகம், துக்கம் இரண்டுக்கும் இடையே உழல்கின்றான். அதனால் பொறிகள் தரும் அனுபவங்களுக்கு உள்ளாகி, அவற்றின் கட்டுப்பாட்டுக்குள் உழன்று தவிக்கும் போது இவற்றை மீற முயல்கின்றான். இயற்கை ஒவ்வொரு அடியிலும் கட்டுப் படுத்தியும் அவன் மீறுகின்றான்.

''மனிதன் இடையறாது முயல்வதெல்லாம் 'சுதந்திர' மாயிருப்பதற்கே; வீடுபெறவே. அடிமைத்தனம்–சுதந்திரம், ஒளி–நிழல், நன்மை-தீமை இப்படி இரட்டைகள் இருக்கத்தான் இருக்கின்றன. ஆயினும் அடிமைத்தளையின் ஒவ்வொரு உண்மையும் சுதந்திர உணர்ச்சி அடங்கிக்கிடப்பதைக் குறிக்கிறது. ஒன்று உண்மையானால் மற்றொன்றும் உண்மைதான். அதை நாம் காண முடியாமலிருக்கலாம். அறிவு முதிர்ச்சியடையாத மனிதனிடத்தில் ஏற்படுகிற அடிமையுணர்ச்சியே அவன் சுதந்திரத்துக்காக ஏற்றுக்கொள்ளும் போராட்டத்தின் அடையாளம்தான். இருப்பினும், அங்கே சுதந்திரத்தின் கருத்தும் இருக்கவே செய்கிறது.''

–சுவாமி விவேகானந்தர்.

இந்த சுதந்திர வேட்கைதான் சமயத்திற்கு அடிப்படை. இந்த வேட்கை புறப்பொருள் தரும் துன்பத்திற்கு வித்தாக இருக்கிறது. புறப்பொருளினுல் பெறப்படும் இன்பம் அழியக்கூடியதாய் இருப்பதால், அழியா இன்பம் பெறுவதற்கு இதைவிட்டு அப்பால் செல்லவேண்டும் என்ற உண்மையை சமய விஞ்ஞானிகள் புரிந்து கொண்டார்கள். அந்த நிலை, அந்த இடம் என்னவென்று ஆராயும் போது அதுவே மனிதன் தன்னுடைய உடல்மய வாழ்வு, மனோமய வாழ்வு புத்திமய வாழ்வு ஆகியவற்றை மீறி நிற்கும் நிலை என்பதைக் கண்டார்கள். அப்போதுதான் கடவுள் என்கின்ற தத்துவமும் வருகின்றது.

மனிதன் தனக்குள் சொல்லிக் கொள்கிருன் : ''நான் பிறவி அடிமை. நான் கட்டுப்பட்டு இருக்கிறேன். ஆயினும் இயற்கையின் நியதிகளுக்குக் கட்டுப்படாத ஒரு '' இருப்பு'' (நிலை) உண்டு. அவர் ஒரு 'ஆற்றல்'. இயற்கையை ''ஆள்பவன்''. எனவே கடவுளைப் பற்றிய கருத்து, கட்டுண்டு கிடக்கும் அடிமைத்தனத்தைப் போலவே மனத்தின் மிக அடிப்படையானதும் சாரமானதுமான ஒரு கருத்தாகும். இரண்டுமே சுதந்திரக் கருத்திலிருந்து எழுந்தவையே''.

— சுவாமி விவேகானந்தர்.

''என் கடமை பாவத்தோடு போர் செய்ய வேண்டியதாகும். இதையும் உணர்ந்தேன். அதர்மத்திஞேடு போர் புரிய வேண்டும். இல்லாவிடில் கடவுளைக் காணும் ஆசையில் பயனில்லை.........''

— காந்தியடிகள்.

ஆண்டவனைப் பாவம் தீண்டாது. அவனே அதற்கு அடிப்படை ஆயினும் அது அவனைத் தீண்டாது.

இன்பம்

உபநிடதத்திலுள்ள ஒரு கதையை அறிந்து கொள்வோம்:

ஒரு மரத்தின் உச்சியில் இரண்டு பறவைகள் உட்கார்ந்திருந்தன. ஒன்று மேலேயும், மற்றொன்று அதற்குக் கீழேயும் உட்கார்ந்திருந்தது மேலிருந்த பறவை ஒன்றையும் உண்ணுமல் அமைதியாக இருந்தது. கீழேயிருந்த பறவை பழத்தைச் சுவைத்தது. சுவைத்தபோது இன்பத்தையும், தீர்ந்தபின் துன்பத்தையும் அடைந்தது. பிறகு அது மேலே பார்த்தது. அங்கிருந்த பறவையை நோக்கிச் சென்றது. வழியில் ஒரு கசப்புப்பழம் தின்று வருந்தி, மேலே பார்த்து ஒதுங்கிக் கடைசியில் மேலிருந்த பறவையை நெருங்கி வந்தது. அப்போது அதன்மேல் ஒளிபடவும் அதுவும் உயர்ந்த பறவையாயிற்று.

இக்கதையின் கருத்து என்ன? மனிதன் உலகைச் சுவைக்கின்றான். கசப்பை உணருகின்றான். பிறகு மேலே செல்லுகின்றான். கடைசியில் முக்தியை, கடவுள் நிலையை அதாவது தன்னுடைய உண்மை நிலைமையை அடைகின்றான். எப்படிச் சொன்னுலும் ஒன்றேதான். ஒவ்வொன்றையும் வைத்துக்கொண்டு வேற்றுமை பாராட்ட முடியும். கடவுளை ஒரு நிலையாகவும், அதுவே நம்முடைய ஆன்ம நிலையாகவும்கொண்டு அத்வைதம் பேசலாம் உருவகக் கடவுள், அவர் இருப்பிடம் ஆகியவற்றைக் கூறி நாம் அவரை அடைய வேண்டும் என்றும் பேசலாம். விவேகானந்தர் கீழ்க்கண்டவாறு கூறுகின்றார்.

''நாம் இந்த ஒருமையைக் காணும்போது அமரத் தன்மையை அடைந்து விடுகிறோம்.''

“முதலில் இந்தச் சின்ன, கூனிக் குறுகிய எண்ணங்களை விட்டுவிடு ஒவ்வொருவனிடமும் அவ்வளவு கைகளின் மூலமும் வேலை செய்து கொண்டு, அவ்வளவு கால்களின் மூலமும் நடந்து கொண்டு, அவ்வளவு வாய்களின் மூலமும் உண்டு கொண்டு, நீக்கமற நிறைந்திருக்கும் அந்தக் கடவுளைக் காண்பாய். ஒவ்வொரு உயிரிலும் அவர் வாழ்கிறார். அவர் எல்லா உள்ளங்களாலும் நினைக்கிறார். அவர் இருப்பது தானே தெரியக்கூடிய ஓர் இருப்பு. அவரை எளிதில் காணமுடியும்”.

உலகியல் கொந்தளிப்பிலிருந்து சற்றே மனதைத் தனிக்க வைத்து, அமைதியுடன் சற்றே இருந்து, மேலே கூறிய—கருத்தை, அதன் பரப்பையும் ஆழத்தையும்—புரிந்து கொள்ள வேண்டும்.

அந்தச் சுதந்திர நிலையே நாம் அறிந்த இன்பதுன்ப நிலைகளுக்கப்பால் உள்ள இடையறு இன்ப நிலையாம். அதுவே கடவுள் நிலை அல்லது முக்தி நிலையும் ஆகும். அதை அடைய நாம், ‘கடவுள் இருக்கிறார்; அவர் சச்சிதானந்த சொரூபம்’ என்ற கருத்தில் தொடங்கி, மேலே “எதுவும் உன் தன் விருப்பன்றே” என்று உணர்ந்து எப்போதும் அவன் அருளையே வேண்டி நின்று முழுக் களங்கத்தையும் துறந்த நிலையில், ‘அவனே நீ; தத்வமஸி’ என்ற உணர்வைப் பெறும் நிலைவரையில் எட்டமுடியும். இதையே, “எல்லா ஜீவராசிகளுடனும் ஒன்றி நிற்கும் நிலையை அடைய ஆசைப்படுகின்றேன்” என்றும் கூறலாம்.

“முக்திக்கு ஆசைப்படுகின்றேன். அதை வைகுண்டத்தில் தான் அடைய முடியும்.”

“ஆட்சியும் அரசனும் ஒன்றே.”

“கொள்கையில் நான் ஒரு அத்வைதி என்று என்னைப் பற்றிச் சொல்லலாம்.”

''ஹிந்து சாஸ்திரத்தில் இன்னொரு விஷயம் சொல்லப்படுகின்றது. கடவுள் உண்டு என்பதைத் தவிர கடவுள் ஒன்றே உண்மை, வேறு ஏதும் இல்லை என்பது ஹிந்து ஞானிகளின் கொள்கையாகும். இஸ்லாம் மதத்திலும் இப்படியே சொல்லப்படுகின்றது. ஆண்டவன் **ஒருவனே மெய்ப்பொருள்.** வேறு ஏதும் உண்மையல்ல என்று இஸ்லாமிய மதத்தில் சொல்லப்படுகின்றது. சமஸ்கிருத பாஷையில் சத்தியம் என்ற பதத்தைச் சோதித்துப் பார்த்தால் அதன் பொருள் 'உள்ளது' என்பதுதான். (தமிழிலும் அவ்வாறே உண்மை என்றால் உளது என்பதுதான் பொருள்). இதனாலும் இன்னும் சில காரணங்களினாலும் நான் கடவுளை விளக்கும் பல பெயர்களில் மெய்ம்மை, உண்மை, சத்தியம் என்கின்ற பெயரே உத்தமமான பெயர் என்கின்ற முடிவுக்கு வந்தேன்'', என்றெல்லாம் காந்தியடிகளும் படிப்படியாக விளக்கம் தந்து பேசியிருக்கிறார்.

உண்மை, அறிவு, இன்பம் என்ற பெயர் கடவுளுக்குச் சொல்லப்படுவதின் கருத்துக்கு இவை எல்லாம் விளக்கமாகும்.

எனவே, சமய நெறி என்பது கடவுள் நெறியே!

கடவுளின் உண்மை

கடவுள் இருக்கிறார் என்பதைப் பற்றிப் பெரியவர்கள் சந்தேகப்பட்டதே கிடையாது. கடவுளைப் பற்றி பேசியவர்களே அதை நம்பியவர்கள்தான். அவர்களே உலகில் அமைதியுடன் நிகழக்கூடிய முன்னேற்றத்தை ஏற்படுத்தியவர்கள். அவர்களே நல்வாழ்வு வாழ்ந்து, உய்ந்து, மக்களும் நல்வாழ்வு வாழ வழிகாட்டி உலகை உயர்த்திய வர்கள்.

''ஈசன் ஒருவன் இருக்கின்ருன் என்பது எல்லாச் சமயங்களுக்கும் அடிப் பீடம்''

-காந்திஜியின் எடுத்துக்காட்டு ஒன்றே போதும்.

''புத்தர் கூடக் கடவுள் இல்லை என்று சொன்னதில்லை'' என்கின்ருர் காந்திஜி.

அந்த கடவுள்

அன்பு மயமானவர்.

சத்திய உருவம்.

அவருடைய அம்சம்தான் மனிதனின்

உண்மையான அம்சம்

இது கற்பனையில்லை.

கடவுள் என்ற தத்துவம் கற்பனையே என்று சிலர் எண்ணுகின்ருர்கள், சொல்லியும் வருகின்ருர்கள். அவர்களுடைய வாதம் மனிதனுடைய சிந்தனையில் தான் ஆண்டவன் தோன்றினுன் என்பதாகும். இந்த வாதத்தை ஒப்புக்கொண்டால் கடவுள் மட்டும் அல்ல, உலகத்தில் எந்தப் பொருளுமே மனிதனின் உள்ளத்தில் தோன்றிய ஒரு தோற்றமே.........

உண்மையில் நம்முடைய அனுபவம் அதிகமாக அதிகமாக உண்மையினுடைய உண்மை உருவத்தை நெருங்குகின்ருேம். ஸ்விட்சைப் போட்டு விளக்கை எரிய விடுபவர் முதலில் அதன் உண்மையைப் புரிந்து கொள்வதில்லை. பிறகு புரிந்து கொள்கிருர். அதனுல் ஸ்விட்சின் உண்மை மாறவில்லை. அது கற்பனையுமில்லை. அதே போலக் கடவுளை முதலில் அறிந்தவர்கள் சொன்னுர்கள்; நமக்குப் பொறுமையில்லை, எனவே, அது கற்பனை என்கின்ருேம்.

"நானும் நீயும் இந்த அறையில் உட்கார்ந்திருப்பது உறுதி யல்லவா? அதைவிட உறுதி எனக்குண்டு ஆண்டவன் இருக்கின்றுன் என்பதில்"-என்று காந்தியடிகள் உறுதியாகச் சொல்கின்ருர்.

இந்தக் கடவுளைப் பற்றிய முக்கியமான சில கருத்துக்களைப் பார்க்கலாம்:

"கடவுள் இவ்வுலகத்தைப் படைத்தார். நாம் கடவுளை மறுக்கின்றபோது சுழலுகிறேம். மாயையை நீக்கி கடவுளை அடைய வேண்டும். அந்தக் கடவுள் வேறெங்கும் இல்லை. நமக்குள் இருக்கும் உண்மை அம்சமேதான் அவர்."

"நமக்குள் உண்மையே அவர்............"—காந்திஜி.

எல்லோருமே ஒரு பராசக்தியை நம்பிப் பிழைத்து வருகின்ருர்கள். கடவுளைப் பற்றி நம்பிக்கை இல்லை என்று சொல்லிக் கொள்பவர்கள்கூட தங்களையுமறியாமல் கடவுளை நம்பித்தான் வருகின்ருர்கள்.

அங்கிங்கெனுதபடி 'எங்கும் ஊடுருவி உண்மைப் பொருளால் பல பெயர்களையும் உருவங்களையும் கொண்டாலும்; பல்புகளிலும், மின்னடுப்புகளிலும், 'விசிறிகளிலும், இயந்திரங்களிலும்—வெளிச்சம், சூடு, காற்று, சக்தியாக, வெளியாகி உருவமற்ற உண்மையாக இருக்கும் மின்சாரம் போல், தோற்றப் பொருள்களுக்குள் எல்லாம் தோன்ருப் பொருளாக இறைவன் இருக்கின்ருர்.

பாலுக்குள் மறைந்துநிற்கும் வெண்ணெய் போல இருக்கும் அப்பொருளை நோக்கிச் செல்லும் மனித வாழ்க்கையையே சமய நெறி வகுத்துத் தருகின்றது.

சமயநெறியின் அடிப்படைத் தத்துவங்கள்:

வாழ்க்கையில் சத்தியம், அன்பு, தியாகம் ஆகியவற்றைக் கொண்டு வாழ்வாய். (கருமயோகம்)

கடவுளை வேண்டித் துதித்து வாழ்க்கையை உயர்த்திக்கொள், (-பக்தி)

ஞானம் அல்லது கடவுள் உண்மை, மற்றவை பொய் என்று உணரும் ஞானயோக வாழ்க்கையை நடத்துவாய்.

★

சமயநெறியின் சில அம்சங்கள்

அடக்கம்

அடக்கம் இல்லாதவர்கள் உண்மையைக் காணமாட்டார்கள். உண்மை என்கிற வெள்ளத்தில் படகேறிச் செல்ல அடக்கத்தை மேற்கொள்ள வேண்டும். 'நான்' என்பதை சூனியமாக்கிக்கொள்ள வேண்டும்.

அன்பு

வாழ்க்கைக்கு மந்திரம் அன்பு அல்லது அஹிம்சையாகும்.

நமக்குள் இருக்கும் ஆண்டவனைக் கண்டு கொள்ளலாம். அதற்கு வைராக்கியமும், விடா முயற்சியும் வேண்டும். நமக்குள் குடியிருக்கும் தெய்வத்தைக் காண்பதற்குப் பல துறைகள் உண்டு. அவற்றுள் அஹிம்சை ஒரு துறை. பூவுலகத்தில் அவதரித்து உபதேசித்த மகான்கள் அனைவரும் அன்புதான் வாழ்க்கை முறை என்பதைக் காட்டி வந்திருக்கின்றார்கள்.

''ஏழைகள் உள்ளத்தில் காணும் நாராயணனே என்னுடைய நாராயணன். அந்த நாராயணனை அவர்கள் காணவில்லை. நான்

காண்கின்றேன். அவர்களுக்குப் பணிசெய்து, சத்திய தெய்வத்தைக் காண்கின்றேன் சுற்றியுள்ளவர்களுக்கு உபகாரம் செய்து வாழும் வாழ்க்கை தெய்வ தரிசனம் பெறும் முயற்சியாகும். ஆண்டவன் படைத்திருக்கும் மக்களிடத்தும், பிராணிகளிடத்தும் அல்லாது வேறு எங்கே நாம் ஆண்டவனைக் காண்போம்?. பிற உயிர்களோடு தன் உயிரை ஒன்று படுத்துவது என்பது அந்த உயிர்களுக்குச் செய்யும் பணியினாலேதான் முடியும்''.

''என்னைப் பொறுத்தமட்டில் முக்திக்கு நான் கண்ட வழி நாட்டுக்கு உழைத்து வருவதேயாகும் இடையறாத உழைப்பை நாட்டுக்குச்செலுத்தி அதன் மூலம் உலகத்திற்குப் பணியாற்றுவதே நான் கண்ட முக்தி மார்க்கம்.'' — காந்திஜி

கடவுளன்பு-பக்தி

ஆண்டவனை நினைவில் வைத்து பக்தி செய்ய வேண்டும். பக்திக்கு வழி, பிரார்த்தனை; எல்லை, ஜபம். விசாரணைக்கு வழி, ஜபம்; எல்லை, தியானம்.

''உடல் உழைப்பு வேள்வியேயாகும்''.

''புலன்களைச் சார்ந்து நிற்காத அறிவு, நிலையான அறிவு. அத்தகைய ஞானம் கைவந்ததற்குப் பிரமாணம், ஒருவனுடைய சீலமும் பண்புமே ஆகும். உள்ளத்தில் ஈசன் கோயில்கொண்டால் பக்தனுக்கு மேற்பட்ட சீலமும் பண்பும் தாமாகவே வந்துவிடும்..........'' எல்லா நாடுகளிலும் கடவுளைக் கண்ட ஞானிகள் தோன்றியிருக்கிறார்கள்.

இந்தக் காட்சி பெறுவதற்கு முன் அசையா நிலையுடன் உள்ளத்தில் பக்தி நிறைந்து நிற்கும் யாரேனும் காட்சி அடைந்து அந்த பேரின்பத்தை அனுபவிக்க விரும்பினால் முதலில் பக்தி பூரணமாக

வேண்டும். பக்திக்கு அடையாளம் சீலம். சத்தியமும் அன்பும் வாழ்க்கையில் சர்வாதிபத்தியம் கொள்ள வேண்டும். உண்மைக்கு மாறுனது எதையும் ஒப்புக்கொள்ளமாட்டேன் என்று தீர்மானித்த பின்னரே பக்தியில் பயில வேண்டும். அதுவே க்ஷேம மார்க்கம். உண்மை மார்க்கத்திலும் அன்பு மார்க்கத்திலும் சேராத மார்க்கம் பக்தி மார்க்கமாகாது. எனவே சமய நெறியானது அறிவு, அன்பு, செயல் ஆகிய மூன்றையும் வற்புறுத்திக் கடவுள்பால் செலுத்த முயலுகின்றது.

பற்றற்ற போகம்

'சமயம் என்பது உலக வாழ்வுக்கோ, வளத்துக்கோ முன்னேற்-றத்துக்கோ எதிரியல்ல! ஆனுல் அது ஆன்ம லாபத்தை அடையக் கருதுகின்றவர்கள், சுயநலத்திற்கு ஆளாகி உலகப் பொருள்களில் அப்படியே ஈடுபட்டு விடக் கூடாது' என்கின்றது. பற்றற்று இன்பம் சுகி.

> *"ஈசாவாஸ்யம் இதம் ஸர்வம்,*
> *தேன த்யக்னே புஞ் ஜீதா":*

என்கின்றது உபநிடதம்.

பொறிகள் தம் பாட்டில் செயலாற்ற, சுகிக்க, நீ பற்றற்று, பற்றற்றுன் பாதத்தை எண்ணி அவனுடன் ஒட்டியிரு என்கின்றன, ஆத்ம போதம், குறள் போன்ற நூல்கள்.

பக்தியும், ஞானமும்

உண்மையான பக்தியும், ஞானமும் உண்டாக வேண்டுமானுல் எந்தப் பயனையும் கருதாது காரியத்தில் ஈடுபட வேண்டும். இந்த அடிப்படையைத் தெரிந்து கொண்டால் சமய நெறி சிறந்த நெறி என்பதை அறியலாம். பணியைப் பயன் கருதாது செய்வதனுல் மனம்

சுத்தமடையும், பக்குவமடையும். பக்குவமடையும்போது மனம் தெளிவடையும். தெளிவடையும் போது கடவுளைக் காண்பது எளிதாகும். கடவுள் என்பது அடிப்படையில் உலக இன்ப துன்பங்களாகிற குழப்பம் நீங்கிய அறிவின் தெளிந்த நிலையேதான். அதை அடைவது தான் ஞானம்.

பணியைப் பயன் கருதாது செய்யும் போது மனம், கோபம், ஆற்றுமை, பதற்றம் முதலிய துர்க்குணங்களைப் படிப்படியாக ஒதுக்கும்; ஒரு தெய்வீக இன்பத்தைப் பெறும். அதன் வழி செல்லச் செல்லக் களங்கம் அல்லது பாசம் அறவே ஒழிந்து சிறந்த ஞானமாகிற கடவுள் நிலையை அடைவோம்.

இனி இரண்டொரு சிறப்புப் பகுதிகளைக் காணலாம்.

சமயச் சின்னங்கள்

எல்லாச் சமயங்களிலுமே புறச் சின்னங்களுக்கு உரிய இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஓரளவு அவை அணியப்படவேண்டும் என்று வலியுறுத்தவும் பட்டிருக்கிறது. அதிலும் சமய போதகர்கள், சமயப் பிரசாரகர்கள், சமயத் தலைவர்கள், சமயச் சடங்குகள் நடத்தி வைப்பவர்கள் ஆகியோருக்கு விதிக்கப்பட்டிருக்கும் சின்னங்கள் எண்ணிக்கையில் அதிகமாயிருப்பதுடன் அவை அணிய வேண்டியதில் கட்டுப்பாடும், வழி முறைகளும் சற்று கடுமையாகவே இருக்கும்.

ஹிந்து சமயத்திலோ, அதன் உட்பிரிவாகவுள்ள சமயக் கிளைகளைப் பின்பற்றுவோர்களுக்குச் சின்னங்கள் தனித்தனியே அமைந்திருக்கின்றன. எடுத்துக்காட்டாக, சைவ சமயத்தினர் திருநீறு பூசி உருத்திராட்சம் அணிந்து, சிவநாமம் சொல்கிறார்கள், வைணவர்களோ திருநாமம், (திருமண், திருச்சூர்ணம்) இட்டு, துளசி மாலை அணிந்து நாராயண என்னும் நாமத்தை நவில்கிறார்கள். அவர்கள் வில்வத்தை ஈசன் பூஜைக்குரிய புனித இலையாகக் கொள்கிறார்கள்; இவர்களோ

திருத்துழாயை அர்ச்சனைக்குரிய புனித இலையாகக் கொள்கிறார்கள். இவ்விதமே மாத்துவர்களின் சின்னங்கள் வேறாக இருக்கின்றன. வைணவர்கள் அணியும் நாமத்திலும் சில மாறுபாடுகள் இருப்பது யாவரும் அறிந்து கொண்ட செய்தியாகும்.

இச்சின்னங்களுள், முக்கியமாக, உடலில் அணியப்படும் அடையாளங்களும் உடை அணியப்படும் விதமும் கையில் வைத்திருக்க வேண்டிய சில சிறப்புப் பொருள்களும், பூஜைக்குரிய லிங்க (அடையாள) வகைகளும் அடங்கும். அவற்றிலும் மாறுபாடு உண்டு. பெண்கள் குழந்தைகளிடையே கூட இம் மாறுபாடுகள் நிலவுகின்றன.

இவற்றைப் பற்றி அதிகம் விவரிக்கத் தேவை இல்லை. எல்லோருக்கும் இந்த விவரம் தெரியும். இவற்றிற்குப் பொருள் என்ன? என்பதுதான் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம். சில சமயம் இவை அணிபவருடைய தோற்றப் பொலிவை அதிகமாக்குகின்றன என்பதில் உண்மையிருக்கிறது என்று ஓரளவு கொள்ளலாம். சில சமயங்களில் அவையே தோற்றத்தை விகாரமாக்காதுபோனாலும், அழகைக் குறைப்பதையும் உண்மையல்ல என்று சொல்ல முடியாது. அது நிற்க, இச்சின்னங்களுக்கு கவனிக்கக் கூடிய இரண்டு வகைப் பொருள் உண்டு. ஒன்று சமய ஆன்மீகப் பொருள், மற்றொன்று சமுதாய அளவில் ''நான் இந்தத் திருக்கூட்டத்தைச் சேர்ந்தவன்'' என்ற குழு உணர்வுக்கு உதவும் பொருளாம். இந்தக் கருத்தில் இச்சின்னங்களுக்கு இன்றைய நிலையில் அதிக மதிப்பு இருக்கக்கூடாது என்பது என் கருத்து.

ஆனால் ஒரு விஷயம், இன்று இச்சின்னங்கள் வெகுவாக மறைந்து வருகின்றன. குடுமி மறைந்து கிராப்பு, கிருதாக்கள் முதலியவை வந்து விட்டன. 'நீறில்லா நெற்றி பாழ்' என்ற உபதேசத்தைக் கேட்டு விட்டு யாரும் அந்த பாழுக்கு மனம் அழுந்துவதாகக் காணோம். நாமம், திருச்சூர்ணம் பற்றி, நெற்றியில் திருமண் காப்புச் சாத்திக்கொள்ளும் கலையை அறிந்த இளம் வயதினரை

விரலை விட்டு எண்ணி விடலாம். இருந்தாலும் சில சமயங்களில் அப்பற்று அதிகரிப்பதையும் காண்கின்றோம். அதை அதிகரிக்கச் செய்ய முயலும் பெரியோர்களும் நிறுவனங்களும் இருக்கின்றன. இப் பற்று அசட்டு மோகமாக இல்லாமல் பொருள் பொதிந்த முயற்சி யாயிருக்குமாயின் நல்லது.

ஆன்மீக - சமயப் பொருள்களில் இச்சின்னங்கள் ஒருபுறம் கடவுள் நினைவை (அவரவர் ஏற்றுக்கொண்ட உருவத்துக்கு ஏற்ப) இடையறுது ஏற்படுத்திக் கொண்டிருக்கவும் மறுபுறம் இந்த உலகிலும் உலகப் பொருள்களிலும் பற்றை வர வரக் குறைக்கவும் அமைத்துக் கொள்ளப்பட்டவையாகும்.

இதைப் புரிந்து கொண்டால் இச்சின்னங்கள் அணிகிறவரைப் பற்றிக் குறை கூறவோ, பரிகசிக்கவோ அல்லது புகழவோ தேவை இல்லை என்பது விளங்கி விடும். அவரவர்கள் தங்கள் தங்கள் மன வளர்ச்சியையும், உறுதியின் அளவையும் பொறுத்து இவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனுல் பல சமயத்தினர் புழங்கும் பொது இடங்களில் இச்சின்னங்களுக்கு அதிக மதிப்புக் கொடுத்து அணிந்து கொண்டு ஆடம்பரப்படுத்தவோ, அணியாததனுல் கழிவிரக்கம் கொண்டு கலவரப்படவோ தேவை இல்லை. தனியேயும் தொடர்ந்தும் பயிற்சி செய்யப்பட்ட மனது, சின்னங்களின் உதவியில்லாமலே, கடவுள் பற்றை ஏற்றிருக்கவும் உலகப் பற்றைத் துறந்திருக்கவும் முடியும்.

சமய வாழ்வும்-கோயிலும்

சமய வாழ்வில் கோயிலுக்குச் செல்லுதல் விதிக்கப்பட்டிருக்கின்றது. ஒரு புனிதக் கட்டிடம் கடவுளின் இருப்பிடமாகக் கருதப்பட்டு அங்கே வழிபாடு செய்யப்படவேண்டும் என்பதை அது வலியுறுத்துகின்றது.

''கோயில்களில் செய்யப்படும் விக்கிரக ஆராதனே பாபம் என்றும், மூட நம்பிக்கை என்றும் சிலர் கருதுவது போல் நான் கருதவில்லே. பலர் கூடி ஆண்டவனுக்குப் பூஜை செய்ய வேண்டியது அவசியம். இதனே ஏதாகிலும் ஒரு முறையில்தான் செய்ய வேண்டும். அதற்கென்று ஒரு பொதுவான இடமும் வேண்டும், இதனுலேதான் கோயில்கள் தோன்றியிருக்கின்றன. கோயிலுக்குள் ஒரு மூர்த்தி இருக்க வேண்டுமா? அல்லது மூர்த்தியில்லாமலே பூஜை செய்யலாமா? என்கின்ற கேள்விகள் அவர்களுடைய சுபாவம், பண்பாடு ஆகியவற்றைப் பொறுத்ததாகும். இந்த விஷயத்தில் அடிப்படைக் காரணம் கொடுக்கப்பட்டுவிட்டது. எனவே, கோயிலே நல்ல முறையில் பயன்படுத்தினுல் அதனுல் சமூகமும் வளரும், மனிதனும் வளருவான். ஆனுல், அதற்காகக் கோயிலுக்குப் போகாதவன் எல்லாம் சமய விரோதி என்ருே, சமயமற்றவன் என்ருே, கருதவேண்டியதில்லே. அதே போலக் கோயிலுக்குப் போவதை ஒரு சடங்காகக் கொண்டு ஒருவன் கோயிலுக்குப் போய் வருவதால் பயன் ஒன்றும் இல்லே.''

''கோயிலுக்குப் போவதால் உலகை விடடு விலகி, உள்ளத்திற்கு மேலேறி, கடவுள் தத்துவத்தில் மனதை இணேத்து நிறுத்தி ஆன்ம ஒளி பெறுதல் வேண்டும். அதை எங்கே பெற முடியுமானு-

லும் நல்லதே. அதைப் பெறத் தெரிந்து கொண்டிருக்கின்றவர்களுக்கு இடம் தேவையில்லை. நல்ல முஸ்லீம்கள் ஓடும் ரயிலில் கூடத் தொழுது விடுகின்றார்கள். ஹிந்துக்கள் சிலர் கோயிலுக்குப் போயும் இரைச்சல் அடங்காமல், மோன நிலையின் இன்பத்தை அடையாமல் திரும்பி வந்து விடுகின்றார்கள்."

"மூர்த்திபூஜையை நான் ஆதரிக்கின்றேன். ஆனால் மூர்த்தி பூஜையானது சுத்த மூடநம்பிக்கையாகி விட்டால் அதை எதிர்க்க வேண்டியது அவசியமாகின்றது. ஆயினும் பக்தி செலுத்துவதற்கு ஒரு உருவம் இன்றியமையாததாகும். பக்தி செலுத்துவதற்கு மூர்த்தி பூஜை மிகவும் பயன்படுகின்றது. புனித நூல் என்று நாம் கருதும் 'கிரந்த' த்தை வைத்து வணங்கினாலும் அதுவும் விக்கிரக வழிபாடேயாகும். அதில் தவறில்லை. ஒரு கோயிலுக்கோ, மசூதிக்கோ பக்தியோடு சென்றாலும், ஒரு தீர்த்த யாத்திரை செய்தோமானாலும் அவையும் விக்கிரக வழிபாடுதான். அதில் ஒரு தவறுமில்லை. ஆண்டவனை வழிபடுவதற்கு ஏதேனும் ஒரு சின்னம் வைத்துக் கொள்வது அவசியமாகின்றது."

"மரத்துக்குப் பூஜை செய்வதில் நான் ஒரு குற்றமும் காணவில்லை."

— காந்தியடிகள்

எனவே இவை மனதை ஒருமுகப்படுத்திக் கடவுள்பால் நிறுத்துவதற்குரிய வெளி உதவிகள் ஆகும். இவை இல்லாமலே மனிதன் இதைச் சாதித்தால் நல்லதே.

"பூஜையில் செலவழிக்கும் காலத்தை ஏழைகளின் பணியில் செலவிடுதல் நலமல்லவா? சமூகத்திற்கு உண்மையில் சேவை செய்கிறவனுக்குப் பூஜையும் தெய்வ வழிபாடும் வேண்டியதில்லை அல்லவா?" என்று ஒருவர் காந்திஜியைக் கேட்டார்.

அதற்கு காந்தியடிகள் கூறிய விடை: "இந்தக் கேள்விகளுக்குக் காரணம் நாஸ்திகமும், சோம்பேறித்தனமும் என்று

எண்ணுகின்றேன். எந்தச் சிறந்த யோகியும் பூஜையையும் பக்தி செலுத்துவதையும் விடுவதில்லை ………… பஜனைக் கூட்டம், பூஜை முதலியவை உண்மையான சேவைக்கு உதவுகின்றன. உள்ளத்தில் ஆண்டவனுடைய நினைவை நிறுத்தப் பயன்படுகின்றன.''

சமயமும் சுயநலமும்

''வேண்டுதலை செய்து கொள்ளும் முறையை நான் அங்கீ கரிக்கமாட்டேன். வேண்டுதல்கள் செய்து கொண்டு சுயநல ஆசை யோடு மரத்தைப் பூஜை செய்தாலும் சரி, கோயில், மசூதி தீர்த்தங்களுக்குச் சென்றாலும் சரி எந்தப் பூஜையும் குற்றம்தான். இவை எல்லாம் வெளி உதவிகளும், வெளியீட்டின் முறைகளுமேயாகும்.''

சமயமும்—பிரார்த்தனை, ஜபம், தியானமும்

''கடவுளை வழிபடுவது என்றால் ஆண்டவனை ஸ்தோத்திரம் செய்வதே. இதனால்தான் வழிபாட்டுக்குத் துதி என்றும் பெயர். ஆண்டவனுக்கு ஆயிரம் நாமங்கள் உண்டு. அதாவது அவன் நாமமே இல்லாதவன். நமக்கு இஷ்டப்பட்ட பெயரை வைத்துப் பகவானை வணங்கலாம், அல்லது பிரார்த்திக்கலாம்.''

''பிரார்த்தனை நம் உள்ளத்தை தூய்மைப்படுத்துகின்றது. கடவுள் கருத்தை உறுதியாக்குகின்றது. உலகம் காட்டும் ஆசைகளை, இன்னல்களைச் சமாளிக்க உதவுகின்றது. உலகுக்கு உழைக்கும் மனப்பாங்கையும், மனோதிடத்தையும் தருகின்றது.''

ஆனால் மூர்த்திபூஜையில் நாம் சொன்னதுபோல் சுயநலம் கொண்டு பூஜை செய்து கடவுளிடம் பிச்சை கேட்கவோ, பேரம் பேசவோ தொடங்கினால் அது தரம் கெட்டு விடும். மிகவும் இன்றியமையாததும், முற்றிலும் நன்மை பயப்பதுமான ஒன்று, முறை பிசகினால் கெடுதல் விளைத்து, பிறர் தூற்றவும் காரணமாகிவிடும்.

பிரார்த்தனைக்குக்கூட ஓரளவு ஸ்தூல சாதனம் வேண்டும். கோயிலில் மூர்த்திக்கு எதிரேயும், புனிதமான இடத்தில் படத்திற்கு எதிரேயும், பிரார்த்தனை செய்கிறோம். சில சமயம் உள்ளத்திலேயே இவற்றைக் கற்பனை செய்து கொண்டும் பிரார்த்திக்கலாம்.

ஜபத்திற்கு நாமம் மட்டும் போதும்

காந்தியடிகள் ராம நாமத்தை நம்பிப் பிழைத்தார். வைணவர்கள் நாராயண நாமத்தையும், சைவர்கள் ஐந்தெழுத்தையும், நம்புகின்றார்கள். 'முருகா!' 'கணபதி!' 'அம்பிகே!' என்ற நாமங்கள் பல சொல்லிப் பயன் பெறலாம். முஸ்லிம்கள் 'அல்லாஹோ அக்பர்' என்று சொல்லிப் பயன் பெறுகின்றார்கள்.

இதைவிடச் சூட்சுமமானது தியானம்

ராமனுடைய நாமத்தை உச்சரித்து உச்சரித்தா அனுமான் பூஜை செய்தான்? தன் உள்ளத்தில் அல்லவோ ராமனை வைத்து- விட்டான். எனவே, உள்ளத்தில் தெய்வத்தை வைத்துவிடுவது தியானமாகும். இத்தியானம் அருவப்பொருளை அடியொற்றிச் செய்யப்படும்போது சமாதி நிலை கிட்டுகிறது. இது மனிதன் ஆன்ம நிலையில் தானே தானாகி மாறி நிற்கும் நிலை ஆகும். இதுவே முக்தி என்பதாம்.

சமயமும் விரதங்களும்

விரதம் என்றால் பட்டினி கிடப்பது மட்டுமல்ல. பட்டினியிலிருந்து கொண்டே கடவுளை வழிபடுவதாகும். இதனுடைய கருத்து உடலை மறந்து—உடலை வருத்தினால் அல்லது உடலைப் போற்றும் எண்ணத்தை மறந்தால் உள்ளம் ஆண்டவன் பால் நிலைக்கும் என்பதாகும்.

எல்லாச் சமயங்களும் விரதங்களை ஏற்றுக் கொள்கின்றன.

நபிகள் நாயகம் 40 இரவுகள் உண்ணுமலிருந்து உண்மை-யைக் கண்டார். உண்ணுமைக்கும் உண்மைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. ஆனுல் உண்ணுமை உடலேயே அழித்து விடும் நிலேக்கு வந்துவிடக்கூடாது.

எச்சரிக்கை

எல்லாம் சமய மயமாக ஆக முடியும். அதற்கு அடிப்படையாக அமைந்திருப்பவை, சுயநலமற்ற அன்புமயமான உடல் வாழ்க்கையும், எப்போதும் கடவுள் கருத்தை மனதிற் கொண்டு, அவனிடம் செல்லும் யாத்திரை மார்க்கமாக வாழ்க்கை நடத்துகின்ற மனே வாழ்க்கையு-மாகும். அது எதையும் வெறுக்காது.

ஆனுல் இதற்குப் பதிலாக அது மனிதருக்கிடையே பாகு பாட்டை வளர்க்குமாளுல், பலாத்காரத்தைப் போதிக்குமாளுல் அது சமயமில்லே.

பொருளாதார, அரசியல் கொள்கைகள் கூட, போராட்டத்-தையோ, மனிதருள் ஒரு பகுதியினரை, அல்லது இனத்தவரை அழிக் கின்ற பேச்சினேயோ பேசுமாளுல் அவையும் தவறே.

சமயம் சண்டையிடச் சொன்னதாக எங்கேயும் கிடையாது.

''மதம் ஒருவருக்கொருவர் அடித்துக் கொள்ளச் சொல்லித் தருவதில்லே'', என்ருர் இக்பால் என்ற முஸ்லிம் கவிஞர்.

அதர்மத்தை எதிர்த்துப் போராடுவதும், உள்ளே உள்ள அரக்க எண்ணங்களே எதிர்த்துப் போராடுவதும், தர்மம் தழைக்க விரும்பு-வதும்தான் சமயத்தின் குறிக்கோள், கருத்து, ஆகிய எல்லாமாகும். எனவே சமயநெறி என்பது அரசியல் வாழ்வு, சமூகவாழ்வு, தனி வாழ்வு என்பவை போன்று தனிப்பட்ட ஒன்று அன்று. அது உங்க-ளுடைய எந்த வாழ்க்கைக்கும் அடிப்படையாக இருப்பதாகும். அது தான் எதற்கும் முறையாகும்.

காந்தியடிகளின் வாழ்வைவிட, விவேகானந்தரின் வார்த்தை களைவிட கீதையின், உண்மையை விட ஏசுநாதர் சிலுவையில் அறையப்பட்ட விதத்தை விட, சிறந்த சமய போதனை கிடையாது. அது காட்டும் சமய நெறியை நாம் புரிந்து கொள்வோம்.

சமயம் காட்டும் நெறி கடவுள் நெறி; மனிதன் தன் வாழ்வை இசைபட வாழ்ந்து அந்தச் சிறப்பின் மூலமே முக்தி அடையக் காட்டும் வழியாகும்

சமயம் என்பது இவ்வுலக வாழ்க்கை எப்படி அமைந்திருந் தாலும் இதனையே இன்பமயமாக்கி அனுபவிக்கவும், வருங்கால வாழ்க்கையை நல்லதாக ஏற்படுத்திக் கொள்ளவும் போடப்பட்ட பாதையாகும்.

மந்திரம், தந்திரம், சித்து, பேய், பிசாசு, போன்ற எல்லாவற்றையும் 'சமய' மாக்குவதிலும் அல்லது சண்டை, கெட்ட குணங்கள் ஆகிய அனைத்தையும் சமயத்தின் பேரால் உண்டாக்கிக் கொண்டு நொந்து கொள்வதிலும் பயன் இல்லை.

கடவுளை நம்புபவன் முட்டாள் என்ருல், கடவுளை நம்பாதவன் அரக்கன், மூடன் என்று சொல்கின்ருன் கண்ணன்- இரண்டையும் புரிந்து கொண்டோமானுல் சண்டை இருக்காது.

உண்மைக் கடவுளை அறிந்து கொள்ளாமல், பேதத்தை வளர்க் கின்ற, மனிதனை மாடாக்கும் 'கடவுளை' வழிபடுபவனும் முட்டாள் தான். ஆனுல் ஒழுக்கம், தவம், சத்தியம், அன்பு ஆகியவற்றை வளர்த்து, ஆன்ம சுதந்திரத்தைப் பெற உதவி நிற்கும் கடவுளைத் தெரிந்து கொள்ள முயலாதவனும் முட்டாளே; அரக்கனே. " அவன் மாயையில் விழுந்த காரணத்தால் இவ்விதம் ஆகிவிடுகின்ருன்', என்கின்ருன் கண்ணன்.

எனவே, மாயையை நீக்க உதவுகின்ற கடவுளையே மாயையில் அழுத்திவிட்டால் அது கடவுளுடைய தவறல்ல. அது கடவுளை வழி படத் தெரியாதவரின் தவறாகும். காவல்காரர் திருடனைப்பிடிக்க உதவுகின்றார். தானே திருடிவிட்டு, காவலரின் உதவியைப் பயன்-படுத்த இயலாத நிலையையும் ஏற்படுத்திவிட்டு, காவல்துறைஆளைப்-பற்றி, "தண்டத்துக்குத்தான் இருக்கிறான்" என்று பேசுவதில் என்ன பயன் இருக்கின்றது?

சமயம் ஒரு விஞ்ஞானம். அது மனிதனை உள்ளும் புறமும் முழு உருவத்திலும் ஆராய்கின்றது. அது அவனுடைய தெய்வத்-தன்மையே உண்மை என்று காண்கின்றது.

அவ்வுண்மை உணர்வை இழந்து, கட்டுண்டு, நிற்பவனுக்குத் தெய்வத்தைக் காட்டி, அதன் அருளுடன், அதை முன்னிட்டு சமய வாழ்வு வாழ்ந்து, மீண்டும் அதை அடைய நெறி வகுக்கின்றது மயம்.

எனவே, படைத்த கடவுளை நம்பி, அவனை நம்பியே வாழ்ந்து, அவனை அடையப் பெறுவதே சமய நெறியாகும்.

சமய நெறியும், நெறி வகுத்தவர்களும்

இந்தச் சமய நெறி நமக்கென முன்னோர்களால், பெரியோர் களால் வகுக்கப்பட்டிருக்கிறது. விஞ்ஞானத்தில் ஒரு கருத்து உண்டு. அதாவது, மனிதன் குறைபாடுடையவன். அவன் எதில் தலையிட்டாலும் குறைபாடுடையதாகச் செய்து விடுவான் என்றாலும் அவன் தலையிடாமல் எதையும் செய்யவும் முடியாதே! இதை நினைவில் கொண்டு, ஓர் உண்மையை எடுத்துச் சொல்லி அதற்கு

மதிப்புக் கொடுத்து நடவுங்கள் என்று சொல்லும் போதே ஒரு எச்சரிக்கையையும் விட வேண்டியிருக்கிறது.

சமய நெறி வகுக்க அடிப்படையாகவும் வழிகாட்டியாகவும் இருக்கின்ற வேதங்கள், ஆகமங்கள் முதலியவை எல்லாம் ''மனிதர்கள் செய்யாதவை'' என்றும், பெரியோர்களுக்கும், ரிஷிகள், முனிவர்களுக்கும் தாமே தோன்றியருளியவை என்றும், அருளிச்செயல்கள் என்றும் சொல்லப்படுகின்றன இதன் கருத்து என்ன? ரிஷிகள், முனிவர்கள், நபிகள், தேவ தூதர்கள் எனப்பட்டவர்கள் சுயநலம் ஒதுக்கி, கடவுளை நோக்கித் தவம் இருக்கும் போது அவர்களுக்கு இக் கருத்துக்கள் தோன்றின. 'தானுக உள்ளிருந்து எழுநதவை' — என்று சொல்லப்படும் இக்கருத்துக்கள் தொகுக்கப்பட்டுக் கொடுக்கப்பட்டிருக்கின்றன அவை மக்களுக்கு நன்மை பயப்பவைதாம்.

ஆனுல், அதே நிலைமைக்குத் தம்மைத் தயாரித்துக் கொள்ளாதவர்களும் சில சமயம் அவற்றிற்கு உரைகளோ அவற்றிற்குச் சமமாகச் சில கருத்துரைகளோ சொல்லத் தொடங்குவதுண்டு. அப்பொழுது அக்கருத்துரைகளும் உரைகளும் ஏமாற்றுபவையாக அமைந்து விடலாம் அந்த இடங்களில் தான் மனிதன் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும்.

எடுத்துக் காட்டுக்கு, கீதையை எடுத்துக் கொள்ளலாம். அர்ஜுனன் தரும யுத்தத்துக்கு வந்து நின்று சாத்திரம் பேசுகிருன். சமய நெறியுரைக்கிருன். சமூக இயலின் சித்தாந்தங்களைப் பேசுகிருன். அவன் சாத்திரம் படித்தவன். துரோணர், பீஷ்மர் போன்ரோரிடம் கலவி கற்றவன். பொருந்தாத பொருளில் அகிம்சை பேசுகிருன். அங்கே கண்ணன் உண்மைப் பொருளை எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது.

அதேபோல் தான் காந்தியடிகள் காலத்திலும் 'ஆங்கிலேயன் அதைச் செய்தான், இதைச் செய்தான், அவனை எதிர்க்கக் கூடாது'

என்ருர்கள். 'அவனை எதிர்த்தால் பாபம்' என்ருர்கள். 'எதிர்த்து உங்களால் என்ன செய்யமுடியும்?' என்ருர்கள். 'அவன் போய் விட்டால் இந்தியாவே அழிந்து விடும்' என்ருர்கள். 'அவர்களுடன் ஒத்துழையாமையா?' என்று பதறினுர்கள். ஆனுல் காந்தியடிகள் இந்தச் ''சாத்திரங்களைக்'' கேட்கவில்லை.

சமயத்தையும் அரசியலையும் பிணைக்கக்கூடாது என்ருர்களே; அடிகள் என்ன சொன்ஞர்? சமயத்தைப் பற்றி நீங்கள் அறியீர்கள். சமயம் காட்டிக் கொடுப்பது வாழ்க்கையின் வழிமுறையைத்தான். அரசியல் வாழ்க்கை வாழ்க்கையில்லையா? மனிதன் சமய, சமூக, அரசியல், பொருளியல் வாழ்க்கை வாழ வேண்டாமா? சமயம் எல்லா வாழ்க்கையையும் ஊடுருவ வேண்டும் என்ருர்.

எனவே, சமயத்தின் அடிப்படைக் கருத்துக்கள் அவற்றின் விளக்கஉரை எல்லாம் சிறந்த மகரிஷிகளால் கொடுக்கப்பட்டிருக்-கிறபடியால் அவை எல்லாம் பின்பற்றப்பட வேண்டியவை அதே நேரத்தில், மாறிவிட்ட காலத்தின் சாயையும், உரைதந்தோர் மகரிஷி களேயாயினும், அவர்கள் தாங்கியிருந்த உடல், மனம் ஆகியவற்றின் சாயையும் அவற்றின் மீது படிந்திருக்குமாதலால், அவை இரண்டும் ஏற்படுத்தும் குறைபாடுகளை நீக்க வேண்டும்.

முடிவுரை :

நாம் சாதாரணமாகச் சிலரைப் பார்த்தவுடன் சமய நெறியாள ராயிருக்கவேண்டும் என்ற முடிவுக்கு வருகிருேம். சிலருடன் சற்றே பழகியவுடன் அந்த முடிவுக்கு வருகிருேம். எந்த அடிப்படையில் நாம் அப்படி முடிவு செய்கிருேம்?

சமயச்சின்னங்களை அணிந்திருக்கிறவர்களைப் பார்த்தவுடன் அவ்விதம் எண்ணுகிருேம். ஆனுல் அது உண்மையான கணிப்பா-காது.

உண்மையாகச் சமய நெறியில் செல்லுகிறவர்கள் ஒன்று, கடவுளை நினைத்து வாழ்வார்கள்; இரண்டு, பாவ புண்ணியத்துக்குப் பயந்து வாழ்வார்கள். இவ்விரண்டு கருத்துக்கள் தாம் அடிப்படைக் கருத்துக்கள்; உண்மையான உரைகல்.

சமயச்சின்னங்கள் அணிதல், சமய நூல்கள் ஓதுதல், சமய குருவுக்குப் பக்தி செலுத்தி வழிபட்டு நடத்தல், கோவில்களில் மட்டு மின்றி வீட்டிலேயும் திருவுருவ வழிபாடு — படத்தை வைத்துக் கொண்டோ, இலிங்கம், சாளக்கிராமம் போன்ற பிரதீகங்களைக் கொண்டோ வழிபாடு — செய்தல் ஆகியவை எல்லாம் கடவுளை நினைத்து வாழ்வதன் கொழு கொம்புகள்.

இவற்றில் சிலவற்றை விட்டோ, முழுவதையும் விட்டோ ஜபம் தியானம் மட்டும் செய்து கொண்டு வாழ்க்கை நடத்துவோரும் உண்டு. அவர்கள் கடவுளைச் சின்னங்கள் இல்லாமலே நெருங்கி யிருப்பவர்கள். எதிலும் எங்கேயும் கடவுளைக் காணக் கற்றிருப்போர். விஞ்ஞானத்தில் சமயம் கண்டார் C. V. ராமன் அவர்கள். தேச மக்கள் அன்பில் கடவுளைக் கண்டார் நேரு அவர்கள்.

பாவ புண்ணியத்துக்கு அஞ்சுதல் ஒருவர் புற வாழ்வைத் தூய்மைப் படுத்தும். அவருக்கு வீண் ஆசை, சுயநலம், பொறுமை வஞ்சனை முதலிய தீய குணங்கள் குறையும். அவர் பாவத்திலிருந்து மீள்வர். பிறகு பயன் விரும்பாத பணி, தானம் செய்தல், பிறருக்கு உதவுதல் முதலியன செய்து புண்ணியம் பெறுவர். அப் புண்ணியத்-தின் பயனாக அறிவு உறுதிப்பட்டு, தெய்வீக வாழ்வுடன் தெய்வ சிந்தனையில் நின்று பற்றறுத்துப் பற்றற்றான் பாதத்தில் நிலைபெற்று இறுதியில் அவர் வீடடைவர். இவர் எங்கேயும் கடவுளைக் காண்பது போல் எந்த வேலை செய்யும் போதும் அதை அவனுக்கு அர்ப்பணமாக்-கிச் செய்வர்.

எனவே, சமய நெறி என்பது:-

1. வாழ்க்கை முழுவதையும் அணைத்து நிற்கும் ஒரு வாழ்க்கை வழி-முறை.

2. அதைப் பெரியவர்கள் காட்டியிருக்கும் வழியில் கடைப்பிடித்து வாழவேண்டும்.

3. அதில் பட்டிருக்கும் கறைகள், ஏற்பட்டிருக்கும் ஓட்டைகள், படிந்திருக்கும் தூசு, துப்பட்டைகள் ஆகியவற்றைச் சமயம் என்று பின்பற்றக் கூடாது.

4. நாமும் நன்கு சிந்தித்து சமய வாழ்வின் சிறந்த அம்சத்தையே பின்பற்றவேண்டும்.

5. நல்ல சமய வாழ்வுக்கு உரைகல் சுயநலம் அறுத்தல், பிறர் நலம் பேணுதல், உலகம் முழுவதையும் அணைத்துக் கொள்ளும் அன்பு, உண்மையைத் தேடும் முயற்சி ஆகியவையாம்.

6. சமய வாழ்வு மனிதனை உயர்த்தவேண்டும்; தாழ்த்தினால் அது சமயமேயில்லை.

7. சமயம் தனித்திருக்கும் சுயநல வாழ்வல்ல, பிறரை வெறுக்கும் அரக்க வாழ்வல்ல, குழுவுடனோ தனி மனிதனுடனோ மோதும் கொலைகார வாழ்வல்ல. உட்பொருளை மறந்து அடையாளங்களைச் சுற்றித் திரியும் நிழல் வாழ்வல்ல. ஊரை அடித்துத் தன் உலையில் போடும் கொள்ளையர் வாழ்வல்ல. ஆனால் அது உல-குக்காகப் பாடுபடும், உலகமுற்றும் பரவும், அன்பைத் தேடும், உலகம் தாங்கும், உண்மையை நாடும், உத்தம வாழ்வு.

அதைப் புரிந்துகொண்டு வாழ்ந்து நாமும் நலம் பெற்று உலகமும் நலம் பெற உதவுவோமாக.

எமது வெளியீடுகளில் சில :-

அநுஸக்தி யோகம்	2—00
காந்திவழிச் சமயம்	2—00
ரகுபதி ராகவ	2—00
கவலையின்றி வாழும் கலை	0—80
ஆசிரம பிரக்ஞோபநிடதம்	1—50
கீதை என் அன்னை	1—00
கீதையின் சாரம்	1—00
இதிகாசங்கள்	1—00
வள்ளலார் கண்ட சாவாக்கலை	0—50
சத்தியமும் கடவுளும்	0—40

கிடைக்குமிடங்கள்

காந்தி நிதி விற்பனை நிலையம்
112, அழகர்கோவில் ரோடு
மதுரை—625002.

காதி கிராமோத்யோக்பவன்
190, அண்ணாசாலை
சென்னை 600002.

காதி கிராப்ட்
குறளகம், எஸ்பிளனேட்
சென்னை—600001.

ராம்ஜே, மதுரை. போன் : 32881